**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV Code of BNSS)**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE ,ADDITIONAL MAHILA COURT, SIVAGANGA.</u>**

**C.C.No.78/2022**

Deposition of Witness for Prosecution - **PW7**

Name திருமதி.பவித்ரா (டாக்டர்)

Father/Husband

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969)

on 16.04.2025

(எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. )

**<u>(Evidence recorder through video conference)</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தாம்பரம் அகர்வால் கண் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.05.2022-ம் தேதி மதியம் சுமார் 1.10 மணியளவில் காளையார்கோவில் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது சானா ஊரணி கிராமத்தைச் சேர்ந்த 55 வயது மதிக்கத்தக்க சேவியர் என்பவரை அவரது மனைவி ஆரோக்கியமேரி சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வந்தார். சேவியர் என்னிடம் அன்றைய தினமே 28.05.2022 காலை சுமார் 11.00 மணியளவில் அடையாளம் தெரிந்த ஒரு நபர் கத்தியால் தாக்கியதாக தெரிவித்தார். நான் அவரை

பரிசோதித்த போது அவர் சுய நினைவுடன் இருந்தார். அவரது இடது புருவத்தின் அருகே 1X1 CM சிராய்ப்பு காயமும், மேல் உதட்டில் 4X2 CM சிராய்ப்பு காயமும் காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு புறநோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டு அனுப்பப்பட்டார். விபத்து பதிவேட்டில் மேற்படி விவரங்கள் குறிப்பிட்ட அவருக்கு ஏற்பட்ட காயமானது சிறுகாயம் என்று காய சான்றிதழ் வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் காயச் சான்றிதழ் நான் வழங்கியது தான். விபத்து பதிவேடுடன் கூடிய காய சான்றிதழ் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள் .

**குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது**

திறந்த நீதிமன்றத்தில் எதிராளி முன்பாக சாட்சி வீடியோ கான்பரன்ஸ் வாயிலாக முன்னிலையாகி சாட்சியம் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவைகளை அப்படியே தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, சரியாக இருப்பதாக சாட்சியால் ஒப்புகொள்ளப்பட்டது.

**(As per VC Rules, the deposition is sent to the mail id of the official witness for signature. After that process directed to keep the deposition in the bundle)**

**ஓம்.திருமதி.ஜா.ஆ.ஃப்ரீன்பேகம்,**
**கூடுதல் மகளிர் நீதிபதி,**
**சிவகங்கை.**